1983 மார்ச் 8]

முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று அரசு மூலமாகவும் நானும் எழுதியிருக்கிறேன், பல இடங்களிலே கூட்டங்களில் பேசுகின்ற போது நான் தெரிவித்திருக்கிறேன், தனியார் நிறுவனங் களிலே ஊனமுற்றோர்களுக்கு கண்டிப்பாக வேலைவாய்ப்பில் முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறேன். அது மட்டுமல்லாமல் தொழில் பழகுவதற்காக நாம் ஊன முற்றவர்களை அனுப்புகிறபோது குறிப்பாக தனியார் நிறு வனங்களுக்கு அனுப்புகிறபோது எவ்வளவு பேர்களை நாம் அனுப்புகிறோமோ அவ்வளவு பேர்களுக்கும் தக்க பணத்தை நாம் கொடுத்து வருகிறோம். அப்படி நாம் அவர்களை அனுப்புகிறபோது ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக ஒரு ஆண்டு அவர்கள் தொழில் பழகியதற்குப் பிறகு அங்கே பெர்ம னன்ட்டாக வேலைவாய்ப்பு பெறக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்ற ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு தான் அனுப்புகிறோம். அரசு நிறுவனங்களிலே அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப் பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) பத்திரிகையாளர் குறித்து பேரவையில் நிறைவேற்றப்பட்ட சட்டம்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர் களே, தங்கள் மூலமாக அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஒரு மிக முக்கியமான பிரச்சினையை நான் கொண்டுவர விரும்பு கிறேன். பத்திரிகையாளர்களுடைய உரிமைகளைப் பாதிக்கக் கூடிய ஒரு சட்டத்தை இங்கே நாம் நிறைவேற்றினோம். அதற்கு எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. அப்போது மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழுவைப் போட்டு இதை மறுபரிசீலனை செய்வதாக ஒரு அறிவிப்பு பத்திரிகைகளிலே வெளிவந்தது. ஆனால் இதற்கு இடையில்—இதேபோன்று ஒரு சட்டத்தை நிறைவேற்றுகின்ற பீகார் மாநிலத்தினுடைய முதலமைச்சர் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு, அனுபவத் திற்குப் பிறகு—அந்தச் சட்டம் செத்துவிட்டது என்று அவர் ஏற்கனவே அறிவித்து இருக்கிறார், இப்போது நான் கேட்க

விரும்புகிறேன், கௌரவத்தைப் பார்க்காமல் தமிழ்நாடு அரசும் இன்றைக்கு அந்த உதாரணத்தைப் பின்பற்றி பத்திரிகையாளர்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடிய அந்த ஜனநாயக விரோதமான சட்டத்தை கைவிடுவதற்கு முன் வருமா ?

(முற்பகல் 10—20)

ஏன் அவர்கள் அந்த மாதிரி அறிவிப்பை வெளியிடுவதற்கு காலதாமதப்படுத்துகிறார்கள் ? அதில் அரசாங்கத்தின் நிலை என்னவென்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திடீரென்று ஒரு பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். முறைப்படி ஒரு கேள்வி மூலமாகவோ, குறுகிய கால வினா மூலமாகவோ கேட்பார்களேயானால் இருக்கிற நிலைமையை அரசு தெளிவுபடுத்த இயலும்.

(ஆ) சத்துணவுத் திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்களை நியமித்தல்.

*Thiru T. VENKATA REDDY : Point of order. Sir, under our Chief Minister's Nutritious Meals Programme Tamil supervisors have been appointed for Tamil Schools. So far, no Supervisor has been appointed in Minority language Schools teaching Kannadam, Telugu, etc. There are a number of minority people in our State they are as good Tamilians as others. They are also interested in the programme. So far, the intention of the Chief Minister is only to appoint people in Tamil Schools. So far, no Supervisor has been appointed in the Minority language Schools. Already more than one month has passed. I would like to know whether the Government has decided to include Minority languages people also in the appointment of Supervisors and if so whether the Government will come forward to appoint minority language Supervisors to the Schools urgently ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர்வைசர் என்று நியமிக்கப்படுகிறவர்கள் திருக்குறளைச் சொல்லித் தரவேண்டுமென்று அரசு எதிர்பார்த்துத்தான் நியமித்து வருகிறோம். தெலுங்குப் பள்ளியில் அவர்கள் எப்படி திருக்குறளைச் சொல்லிக் கொடுப்பது என்பது ஒரு புதிய பிரச்னையாக வந்திருக்கிறது, அதுபற்றி நாம் ஒரு முடிவை எடுத்ததற்குப் பின்னால் நியமிக்கப்படுவார்கள்.